விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 14 ரஜப 10 இதழ்: 276

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 27-1-1991

## வவுனியாவில் பரவலான விமானத்தாக்குதல்

[வவுனியா]

வவுனியாவில் நேற்று முன் தினம் பரவலாக விமானக் குண்டுத்தாக்குதல் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள சாஸ்திரிகூழாம் பகுதியில் நேற்று முன் தினம் காலை இடம்பெற்ற கடும் விமானத் தாக்குதலில் வீடுகள், அரிசி ஆலைகள், உழவுயந்திரங்கள் என்பன சேதமடைந்துள்ளதுடன் மண்ணெண்ணை நிரம்பிய 5 பரல்கள் வெடித்துச் சிதறின.

இம்மாவட்டத்தில் உள்ள வேப்பங்குளம்பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சினால் ஒரு அரிசி ஆலை சேதமாக்கப்பட்டதுடன் அரிசிஆலையில் வேலை

(4-ம் பக்கம் பார்க்க)

## அளவெட்டியில் குண்டுவீச்சு வயோதிபர் ஒருவர் பலி

[யாழ்ப்பாணம்]

அளவெட்டிப் பகுதியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் வயோதிபர் ஒருவர் பலியானார்.

இரு விமானங்கள் நடத்திய குண்டு வீச்சினால் வீடு ஒன்றும், ஆச்சிரமம் ஒன்றும் பலத்த சேதமடைந்தன.

குரும்பசிட்டியைச் சேர்ந்த இளையதம்பி இரத்தினம் (60 வயது) என்பவரே இச்சம்வத்தில் பலியானவராவார். (வி)

# திருமலையில் கைதான தமிழ் இளைஞர்கள் பூஸாவுக்கு கொண்டு செல்லப்பட்டனர்!

[திருமலை]

**திருகோணமலை மாவட்டத்தில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் இளைஞர்கள் காலியிலுள்ள பூஸா தடை முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக இடம்பெற்ற இராணுவ சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் வேட்டைகளின் போது கைது செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்களே பூஸா முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த இளைஞர்கள் பற்றிய விபரம் எதனையும் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக திருகோணமலை மாவட்டத்திலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வி)

## மின்கோபுர திருத்தவேலை ஆரம்பிக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

மாங்குளத்தில் சேதமடைந்த மின்கோபுரங்கள் திருத்தும் வேலைகள் இதுவரையும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் கிளிநொச்சி - யாழ்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலினால் ராணுவம் பின்வாங்கியது

[வவுனியா]

வவுனியா மாவட்டத்திலுள்ள செக்கடிப்புலவு இராணுவமுகாமிலிருந்து வெளியேற முனைந்த இராணுவத்தினரை மறித்து புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## சுக்ளா ஜனாதிபதியை சந்திப்பார்

(கொழும்பு)

நாளை திங்கட்கிழமை இலங்கை வரும் இந்

[4ம் பக்கம் பார்க்க]

## நிர்ணயிக்கப்பட்ட விலையில் நேற்று பொருட்கள் விற்பனை!

[யாழ்ப்பாணம்]

யாழ். நகர், திருநெல்வேலி, நீர்வேலி, கல்வியங்காடு, சாவகச்சேரி ஆகிய இடங்களில் நேற்று பல வர்த்தக நிறுவனங்களில் அத்தியாவசியப் பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் விற்பனைசெய்யப்பட்டன.

குறிப்பிடப்பட்ட வர்த்தக நிறுவனங்களின் முன்னால் நேற்று நீண்ட வரிசையில் மக்கள் நின்று பொருட்களைக் கொள்வனவுசெய்தனர்.

சாவகச்சேரியில் கைத்தொழில் வர்த்தகர் சங்கத்தின் தீவிர கண்காணிப்பைத்

(4-ம் பக்கம் பார்க்க)

## கடற்படை கெடுபிடி மீனவர்கள் பாதிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு தெற்குக் கடல் பிராந்தியத்தில் கடற்படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில் அப்பகுதிக் கடலில் தொழில் செய்யமுடியாத நிலையில் அப்பகுதியில் உள்ள பெருந்தொகையான மீனவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தமுடியாதநிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையால் அப்பகுதிக் கடலில் பாய்ந்துள்ள கழங்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஒன்பதுமாதக் குழந்தை கழுத்து நெரித்துக்கொலை

(நல்லூர்)

ஒன்பது மாதப் பச்சிளங் குழந்தையொன்று கழுத்து நெரித்து கொல்லப்பட்டது.

யாழ். பிரம்படி வீதியில் வசிக்கும் சௌந்தரராசன் (34வயது)என்பவரே சர்மிளா என்ற தனது ஒன்பது மாதக் குழந்தையைக் கழுத்தை நெரித்துக் கொன்றதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## 8 இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் கைது

[சென்னை]

இரு பெண்கள்உட்படஎட்டு இலங்கைத் தமிழர்கள் நேற்று தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

விவசாயிகள் தமக்குத் தேவையான கத்தரி, மிளகாய், கோவா போன்ற மரக்கறி நாற்றுக்களையும் மரக்கறி விதைகளையும் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற ஸ்ரீராம் விவசாயப் பண்ணையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். திரு. தே. வரதராசா சிவஜீவரன் விவசாய விற்பனை நிலையம் அராலி மேற்கு வட்டுக்கோட்டை. (சி-4290)

### ஒப்செட் கலண்டர்கள்

கடவுள் படங்கள், குழந்தைகள், படங்கள், சினிமா படங்கள் கண்ணைக் கவரும் வர்ணங்களில் லித்தோவில் அச்சிடப்பட்ட 1991-ம்ஆண்டு மாதக் கலண்டர்கள் விற்பனையாகின்றன. (மீரா வெளியீடுகளும்) வியாபாரிகளுக்கு கழிவுண்டு. மாக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். (சி-4291)

### A/L இரசாயனம்

A/ L, 90, 91, 92 க்கான சேதனவுறுப்பு இரசாயனம் முன்னுள் கொழும்பு சர்வகலாசாலையின் கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியர் B. Sc Ceylon அவர்களால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (சி-4285)

### ஜோதிடம்

சனிமாற்றம், ஜோதிட விஞ்ஞானம், எண் ஜோதிடம், ரேகை சாஸ்திரம், யோகாசனம், நான் யார்? ஆத்மவிசாரணை, ஆனந்த ரகசியம், ஆத்மசோதி தரிசனம். விற்பனைக்கு நூல்களாசிரியர்: Prof. சத்தியதாஸன் Mech. (Eng, Elce. Eng) ஞானம்ஸ் ஸ்ரோர்ஸ் சித்தன் கேணிச் சந்தி. (சி-4285)

### பாலாஜி புத்தகசாலை

சிறந்த எழுத்தாளர்களின் நூல்கள் பாடசாலை புத்தக உபகரணங்கள், ராணிமுத்து, ராணி காமிக்ஸ் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம். 15/6 முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4297)

### புலிக்கொடி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகத்தில் அதி உயரத்தில் புலிக்கொடி ஒன்று ஏற்றப்பட்டுள்ளது.

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

ஈராண்டுப் பகுதிநேரக் கல்விப் பட்டபின் டிப்புளோமா

## கற்கைநெறி - 1990|91

பட்டம் பெற்றபின் மூன்றுண்டு கால ஆசிரியர் சேவை அனுபவமுடைய அரசாங்க பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 28-02-91 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறி தொடர்பானவிண்ணப்ப படிவங்களைப் பெறவிரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும்நேர்முகத்தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

தெரிவு செய்யப்படுவோர் 26 மைல் சுற்றுடலில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்குப் பதிவு செய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 21-04-91ம் திகதி பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களை உங்கள் பாடசாலை அதிபர் ஊடாக, சிரேஷ்ட உதவிப் பதிவாளர் கல்விக்கிளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், திருநெல்வேலிஎன்னும்முகவரிக்கு 28-02-91ம் திகதிக்கு முன்பு அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்.

24-01-91. (எ.1064)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

முழுநேரக் கல்விப்பட்டபின் டிப்ளோமா கற்கைநெறி

1990 / 91

புதிய அனுமதி

பட்டம் பெற்றபின் மூன்றுண்டு கால ஆசிரியர் சேவை அனுபவமுடைய தனியார் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 28-02-91 இல் 50வயதுக்குக் குறைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

இககற்கை நெறி தொடர்பான விண்ணப்பங்களைப்பெற விரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப்பெற்றுக்கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும்நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வுநாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 21-04-1991ம் திகதி பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களை உங்கள் பாடசாலை அதிபர் ஊடாக சிரேஷ்டஉதவிப் பதிவாளர், கல்விக்கிளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 28-02-91ம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்.

24-01-91.

[எ-1063]

---

### பொதுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு. க. பஞ்சலிங்கம் தலைமையில் இம்மாதம் 30ம் தேதி புதன் கிழமை காலை சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்.

---

மர்மமான முறையில்

## மீசாலை வாலிபர் இத்தாலியில் கொலை

(யாழ்ப்பாணம்)

மீசாலையைச் சேர்ந்த பரமேஸ்வரன் (வயது 24) என்னும் வாலிபன் இத்தாலியின் எல்லைப் பகுதியில் மர்மமான முறையில் கத்தியால் குத்தி கொடூரமாக கொலை செய்யப்பட்டுக்கிடக்கக் காணப்பட்டதாக அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மாதம் முற்பகுதியில் ஜேர்மனியில் உள்ள இவரது சகோதரியிடம் செல்வதற்காக கொழும்பிலிருந்து சில வாலிபர்களுடன் ஜேர்மனிக்குப் புறப்பட்டதாகவும், கடந்த வாரம் இத்தாலியின் எல்லைப்பகுதியான சோபியா என்ற இடத்தில் இவரது சடலத்தை இத்தாலியப் பொலிஸார் கண்டுபிடித்ததாகவும் கூறப்படுகின்றது. (வி)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

முழுநேரக் கல்விப் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி

1989/90

விரிவுரைகள் ஆரம்பம்

அரசாங்கப் பாடசாலைகளிலும் தனியார் பாடசாலைகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கான மேற்குறிப்பிட்ட கற்கை நெறிக்கான விரிவுரைகள் 1991-02-11ம் திகதி ஆரம்பமாகும்.

அரசாங்க பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களும் 1991-02-11ம் திகதிக்கு முன் பதிவு செய்து விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,

24-02-91.

(எ-1062)

---

### இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் பத்தாவது ஆண்டு விழாவையொட்டி இன்று இசை ஆராதனை நடைபெறவுள்ளது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இந்த இசைஆராதனை நல்லூரிலுள்ள கம்பன் கோட்டத்தில் நடைபெறும்.

---

இருபாலை

### வர்த்தகர் முன்மாதிரி

(யாழ்ப்பாணம்)

இருபாலையிலுள்ள ஏ. எம். ரி. வர்த்தக நிறுவனத்தினர் கோப்பாய் தெற்கு கிராமிய உற்பத்தி குழுவிற்கு தாமாகவே முன்வந்து கையளித்த நான்கு பரல் மண்ணெண்ணெய் பொதுமக்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கப்பட்டது.

---

### பள்ளிவாசலில் குண்டுவெடிப்பு

(கன்பரா)

அவுஸதிரேலிய பள்ளிவாசல் ஒன்றின்மீது நேற்றுமுன் தினம் பலத்த குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் பள்ளிவாசல் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

---


## போட்டோ ஸ்ரரற்

நல்லூரில்

தரமான, தெளிவான போட்டோ ஸ்ரரற் பிரதிகளுக்கும், கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கும் நாடுங்கள்:-

### சி த் ரா ல யா,

351, கோவில் வீதி, நல்லூர்.

(கோவில் பின் வீதியில், கம்பன் கோட்டம் முன்பாக)

(ஏ 1059)

# இஸ்ரேல், சவூதி அரேபியா மீது ஈராக் ஒரேநேரத்தில் ஏவுகணை தாக்குதல்;

## இருவர் பலி, 40 பேர் காயம்!

### 6 மாடிக்கட்டடம் தரைமட்டம்

(பாக்தாத்)

ஈராக் நேற்று முன்தினம் ஒரேநேரத்தில் இஸ்ரேல் மீதும் சவூதி அரேபியா மீதும் 'ஸ்கட்' ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது. இத் தாக்குதலில் இருவர் பலியானார்கள். 40 பேர் காயமடைந்தனர்.

இந்த ஏவுகணைகளை இடையில் வழிமறித்து அழிப்பதற்கு அனுப்பப்பட்ட அமெரிக்க ஏவுகணைகளால் இவற்றை அழிக்க முடியாமல் போய்விட்டது.

அமெரிக்க ஏவுகணையின் எதிர்த் தாக்குதலை முறியடித்து ஈராக் ஏவுகணைகள் குறிப்பிட்ட இலக்குகளில் வீழ்ந்து வெடித்தன.

### இஸ்ரேல் தலைநகரில்

இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவில் ஏவுகணை விழுந்ததால் ஒருவர் பலியானார். 40 பேர் காயமடைந்தனர்;

இது இஸ்ரேல் மீது ஈராக்கினால் ஏவப்பட்ட ஐந்தாவது ஏவுகணையாகும். பெரும் சத்தத்துடன் இந்த ஏவுகணை வீழ்ந்து வெடித்ததாக இதனை நேரில் பார்த்த பொதுமக்கள் தெரிவித்தனர்;

### சவூதி த லைநகர் மீது

சவூதி அரேபியாவில் 'றியாட்' நகரில் ஈராக்கின் ஏவுகணை தாக்கியதால் ஒருவர் பலியானார்; 6 மாடி அரச கட்டடம் தரைமட்டமானது; சவூதி மீது 3 ஏவுகணைத் தாக்குதல் இடம்பெற்றது. இரு ஏவுகணைகள் அமெரிக்க றொக்கட்டினால் இடைவழியில் அழிக்கப்பட்டது, மூன்றாவது ஏவுகணை குறிப்பிட்ட இலக்கை தாக்கியது,

### 72 முறை வான் தாக்குதல்

அமெரிக்க நேச படைகளால் நேற்றுமுன்தினம் 72 தடவைகள் வான் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேச படைகளின் பத்து விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக ஈராக் அறிவித்துள்ளது,

போர் ஆரம்பமான முதல் சில தினங்களில் காலநிலை சீரில்லாதிருந்ததால் திட்டமிட்டபடி வான் தாக்குதலை நடத்தமுடியாமல் போய்விட்டதாக நேசபடைகள் அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டார். நான்கு யுத்த விமானங்கள் பாக்தாத் பிரதேசத்திற்குள் சென்று குண்டுகள் போடாமலே திரும்பின என்றும் அவர் தெரிவித்தார்;

### குராத் தீவில் மனிதர் இல்லை

குவைத்துக்கு 50 மைல் தூரத்திலுள்ள 'குரா' தீவில் மனித சஞ்சாரம் இல்லை என்றும் தாக்குதலின் போது ஈராக் படையினர் எவரும் அங்கு இருக்கவில்லை என்றும் ஈராக் தெரிவித்துள்ளது;

அத்தீவில் தங்கியிருந்த சில துருப்புக்கள் முதல்நாளே அங்கிருந்து வெளியேறிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### அரபு பிரதேசம் மீட்கப்படும்

பலஸ்தீனமும் அரபுப் பிரதேசங்களும், இப் போர் முடிவில் மீட்கப்பட்டுவிடும் என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசெய்ன் நேற்று தெரிவித்துள்ளார்.

ஈராக் ஜனாதிபதி நேற்று துணிச்சலுடன் யுத்தத முனைகளுக்கு சென்று படையினரை நேரில் பாராட்டி உற்சாகமூட்டினார்;

### தற்கொலை படைக்கு பணிப்பு

இதே சமயம் அமெரிக்க நேசநாட்டு படைகளின் போர்க் கப்பலை அழித்து விடுமாறு ஈராக் தற்கொலை படைக்கு ஈராக் கவுன்சில் அனுமதி வழங்கியுள்ளது

அமெரிக்க நேசபடைகளில் 104 போர்க்கப்பல்கள் வளைகுடாவில் நிலைகொண்டுள்ளன.

இவற்றில் 3 போர் கப்பலை ஏற்கனவே ஈராக் தற்கொலை படையினர் மூழ்கடித்து விட்டனர்;

---

## இனப்பிரச்னையை தீர்ப்பதிலிருந்து அரசு தான் நழுவிக்கொள்ளவே சர்வகட்சி மாநாட்டை கூட்டுகிறது!

### பேர்னுட் சொய்ஸா கண்டனம்

(கொழும்பு)

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் எமது நாட்டை ஆட்சிசெய்த ஆட்சியாளர்கள் சிறுபான்மை மக்களின் உரிமைகளையும் அவர்களது அபிலாசைகளையும் நிறைவேற்ற மறுத்தமையால் இன்று இனப் பிரச்சனை யுத்தமாக வெடித்துள்ளது; யுத்த நிறுத்தம் பற்றி சர்வகட்சிகளையும் அழைத்து இந்த அரசாங்கம் பேசுவது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கல்ல. தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காகவே அரசு சர்வகட்சி மாநாட்டை கூட்டிவருகிறது.

இவ்வாறு இலங்கை சமசமாஜிக்கட்சியின் பொதுச் செயலாளர் பேர்னுட் சொய்ஸா அம்பலாங்கொடை நகர மண்டபத்தில் நடைபெற்ற ஐம்பத்தைந்தாவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "யுத்தத்தை ஒழிப்பதற்கு சமாதானம் வழி செய்கிறது. எனவே இலங்கை அரசாங்கம் பரந்தமனத்துடன் சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்கி வடக்கு கிழக்கில் சுமுகமானநிலையை ஏற்படுத்த வேண்டும். தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் சட்டத்தின் மூலமின்றி தாமாகவே ஆயுதங்கள் பாவிப்பதை தவிர்த்துக்கொள்வதற்காக அரசாங்கம் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும். யுத்த நிலைகளில் இருந்து முடிவுகள் எடுக்க வழியில்லை அவை குறித்து கொழும்பில் இருப்போரும் வேறு ஆட்களிடம் ஆலோசனை பெறுகிறார்கள் இங்கிலாந்திலும் ஆலோசனை பெறுகிறார்கள். அங்கிருந்து முடிவுகள்வரும் போது இங்கு அனைத்தும் முடிந்து விடுகின்றன. எனவும் அவர் தெரிவித்தார்; [எஸ்]

---

## நாளை இலவச விநியோகம்:

## மண்ணெண்ணை, அரிசி வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நாளை திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ள 4ம் கட்ட விசேட இலவச உலர் உணவுப் பொருட்கள் விநியோகத்தில் ஒரு அங்கத்தவருக்கு 2 கிலோ அரிசி, 1 கி. மா, ½கி. சீனி, ½ கி. பருப்பு, ½ லீ மண்ணெண்ணை, சில்லறைப் பொருட்கள் ஆகியன வழங்கப்படவுள்ளது.

2 அங்கத்தவர் குடும்பத்துக்கு 4 கி. அரிசி, 2கி. மா, 1 கி. சீனி, ½கி. பருப்பு, ½லீ. மண்ணெண்ணை, சில்லறைப் பொருட்கள் ஆகியவை வழங்கப்படும்:

3 அங்கத்தவருக்கு 5 கி. அரிசி, 2½ கி. மா, 1கி.சீனி, ½ கி. பருப்பு. பால்மா, ½லீ. மண்ணெண்ணை, சில்லறைப் பொருட்கள் விநியோகிக்கப்படவுள்ளது.

4 அங்கத்தவர்கள் குடும்பத்துக்கு 6 கி.அரிசி, 3கி. மா, 1½கி. சீனி, ½கி. பருப்பு, பால்மா. ½லீ. மண்ணெண்ணை மீதிக்கு சில்லறைப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

5 அங்கத்தவர் குடும்பத்துக்கு 9 கி. அரிசி, 3கி மா, 2 கி. சீனி, 1கி. பருப்பு, பால்மா, ½ லீ. மண்ணெண்ணை] மிகுதிக்கு சில்லறைப் பொருட்கள் ஆகியவையும் விநியோகிக்கப்படவுள்ளது.

(153)

---

## 33 யுத்த கைதிகள்

பிரிட்டனிலுள்ள 33 ஈராக்கியர் யுத்த கைதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது, இவர்கள் ஈராக் ஆயுதபடையைச் சேர்ந்தவர்களென சந்தேகிக்கப்படுவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது

குவைத்தின் தென்பகுதி எல்லைகளில் ஈராக் படைகள் குவிக்கப்பட்டு அப்பகுதி பலப்படுத்தப்படுவதாக அவதானிகள் தெரிவித்தனர்.

### துருக்கி குற்றச்சாட்டு

ஜெர்மனி ஈராக்கிற்கு உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்களை வழங்கியுள்ளதாகவும் அவை நேட்டோ நாடுகளில் அங்கம் வகிக்கும் துருக்கிக்கு எதிராக பயன் படலாம் எனவும், ஜெர்மனி நேட்டோவின் நம்பத்தகாத உறுப்புநாடாக கருதப்படல் வேண்டும் என துருக்கி குற்றம் சாட்டியுள்ளது.

★ தமது தரப்பில் 24 விமானங்களை இழந்தும் 25 விமானிகள் காணாமற்போயுள்ளதாகவும் ஈராக் அறிவித்துள்ளது.

இதேவேளை ஈராக்கின் 19 ஜெற் விமானங்களை தாம் சுட்டு வீழ்த்தியதாக பன்னாட்டுப் படைச் செய்திகளும் கூறுகின்றன;

### இலங்கையில் பாதிப்பு

★ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் திரு. அநுரா பண்டாரநாயக்கா வளைகுடா யுத்தத்தினால் இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளாக்கப்பட நேரிடலாம் என அரசாங்கத்தை எச்சரித்தார். மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் திரு. தினேஷ் குணவர்த்தன, ஐக்கிய சோஷலிஸ்ட் முன்னணி உறுப்பினர் திரு. அத்தாவுட செனிவரத்தன எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரும் வளைகுடாப்பிரச்சனையால் இலங்கையில் ஏற்படப் போகும் விளைவுகள் குறித்து காரசாரமாக உரையாற்றினர்.

---

## இராசிபலன்

27-01-1991
ஞாயிறுக்கிழமை

மேடம்: எதிர்பாராத உதவி, வாழ்க்கைச்சுகம், தொழில்லாபம்.

இடபம்: வரவுக்குமீறிய செலவு, தொழில்பிணக்கு, குடும்பப்பகை.

மிதுனம்: பணவரவு. குடும்ப மகிழ்ச்சி. அந்நிய ருதவி, புகழ்.

கடகம்: தாய்வழிச்சுகம், தொழில் பாதிப்பு, குடும்பத்தில் சுபநிகழ்ச்சி.

சிங்கம்; தொழில்மாற்றம், இனசனஉறவு, காரியவெற்றி, பயணம்.

கன்னி: குடும்பக்கவலை, வைத்தியசெலவு, தொழில் பிணக்கு, பணித்தடை.

துலாம்: குடும்பசந்தோசம், கணவரால்தொல்லை, தொழில் கஷ்டம்.

விருச்சிகம்: வயிற்றில் ரோகம், வேலைப்பளு, பொதுப் பணிதொல்லை.

தனுசு: காரிய வெற்றி, தொழில் பாராட்டு, அதிகாரிகள் உதவி.

மகரம்; வாக்குப்பலிதம், உடல் சோர்வு, தொழில் லாபம், கடன்வரவு.

கும்பம்: பழைய நினைவுகள், பெண்தொல்லை, தொழில் நஷ்டம்.

மீனம்: எதிரிகள்தொல்லை, பணக்கஷ்டம், புத்திரர்கவலை, கடன்.

ஜோஸ்யர்

## ஈராக் பாவித்தால்
# நேசப்படைகளும் ரசாயன ஆயுதங்களை பாவிக்கும் - பிரிட்டன்

(லண்டன்)

அமெரிக்க நேசநாட்டுப் படைகளுக்கு எதிராக ஈராக் ரசாயன ஆயுதங்களை பயன்படுத்துமேயானால், அமெரிக்க சார்புப்படைகளும் ரசாயன ஆயுதங்களை பயன்படுத்தத் தயங்கமாட்டாது என பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவில் உள்ள மக்காவையும் மதினாவையும் மீட்டு ஈராக்கின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்போவதாக ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசையின் சபதம் செய்துள்ளார்.

# ஈராக் இஸ்ரேல் மீது மீண்டும் ஏவுகணைத்தாக்கு

(பாக்தாத்)

ஈராக், இஸ்ரேல் மீது நேற்று ஐந்தாவது தடவையாக ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது.

இதற்குப் பதில் தாக்குதல் உடனடியாக மேற்கொள்ளப் போவதில்லை என்று இஸ்ரேல் பிரதமர் தெரிவித்தார்.

"வளைகுடாப் போரில் அமெரிக்கா மேற்கொண்டு வரும் பணிகளை முடிக்கும் வரை, நாம் இதுபோன்ற ஈராக்கின் தாக்குதல்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்வோம்" என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதேவேளையில் நேச நாடுகளின் விமானத் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுத்து வந்த 6 ஈராகியப்போர் விமானங்கள், அவசரம் அவசரமாக ஈரானில் தரையிறங்கியதாகவும் கூறப்படுகிறது.

சவூதி அரேபியா மீதும் ஈராக் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது.

## 'வில்லி லில்லி' வருகிறது

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்குரிய உணவுப் பொருட்களுடன் 'வில்லி லில்லி' கப்பல் வலைப்பாடு துறைமுகத்திற்கு இம்மாதம் 30ம் திகதி வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### தம்பு குழந்தைவேல்

முன்னைநாள் உத்தியோத்தர்
(K. M. KALIYAPPAPILLAI & Co Ltd
MERCANTILE CORPORATION)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பு குழந்தைவேல் அவர்கள் (23-01-91) அகாலமரணமானார். இவர் காலஞ்சென்ற செல்லப்பா தம்பு (P. W. D ஓவசியர்) திருமதி தம்பு மாணிக்கவல்லி ஆகியோரின் அன்பு மகனும் பரிமளாதேவியின் அன்புக் கணவரும் செல்வி சுதா (யாழ்ப்பாணக்கல்லூரி உதற்றல் சேச்நேசறி ஆசிரியை) சுபேந்திரன் (யாழ். பல்கலைக்கழக இறுதியாண்டு விஞ்ஞான பீட மாணவன்) ஜெயேந்திரன் (யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத்தந்தையாரும் குமாரவேல் (இளைப்பாறிய A. I) காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம் வள்ளிநாயகி, ஆறுமுகம் (பொறியியளாளர் சம்பியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இ. பரமகுருசாமி (இளைப்பாறிய ஓவசியர்) காலஞ்சென்ற திருமதி பரமகுருசாமி சௌந்தரம்மா ஆகியோரின் மருமகனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23-01-91) புதன்கிழமை பிற்பகல் 3. 30 மணியளவில் வழக்கையாறு மயானத்தில் நடைபெற்றது. இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கு: சுபேந்திரன்

[சி-4296]

## இராணுவம் வாலிபர்களிடம் கொள்ளை

(வவனியா)

வவுனியா நகரில் உள்ள இராணுவத்தினர் கிளிநொச்சியைச்சேர்ந்த ந. சந்திரகுமார் (வயது 23) ஊரிக்காட்டைச் சேர்ந்த ஜெகநாதன் ஆகியோரை கைதுசெய்து கடுமையாகத் தாக்கிய பின்பு விடுதலைசெய்தனர்.

இவர்களை விடுதலை செய்வதற்குமுன்பு, சந்திரகுமாரிடமிருந்த 32 ஆயிரம் ரூபாவையும். ஒன்றரைப் பவுண் சங்கிலியையும் பறிமுதல் செய்ததாகவும் கூறப்படுகின்றது. (வி)

### 8 இலங்கைத் தமிழர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு எரிபொருள் கடத்த முற்பட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

### ஒன்பதுமாத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தை தொடர்ந்து சந்தேக நபரான தந்தை தலைமறைவாகி விட்டார். இது தொடர்பாக விடுதலைப் புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (152)

### நிர்ணயிக்கப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து இங்குள்ள வர்த்தகர்கள் ஒரு நாளைக்கு 150 பேருக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் பொருட்களை வழங்கி வருகிறார்கள்.

தினமும் இரண்டு அல்லது மூன்று வர்த்தக நிலையங்களில் நம்பர் மூலம் இந்தப் பொருட்கள் இங்குவிநியோகிக்கப்பட்டு வருகிறது

### தேங்காய் எண்ணெய் வழங்கப்பட்டது

நீர்வேலி கரந்தன் சந்திப் பகுதியில் தலா ஒவ்வொரு லீற்றர் தேங்காய் எண்ணெய் வர்த்தக சங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டவிலைகளில் நேற்று வழங்கப்பட்டது.

'லம்போதரன்' வர்த்தகநிறுவனத்தின் ஏற்பாட்டிலேயே மேற்படி தேங்காய்எண்ணெய் வழங்கப்பட்டது.

இதேநேரத்தில் கடந்த பல நாட்களாக மறைந்திருந்த மண்ணெண்ணை. பெற்றோலை அங்காடி வியாபாரிகள் விற்பனை செய்யவதைக் காணக் கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணத்தின் மத்தியில் உள்ள 'குகன் ஸ்ரோரில்' நேற்றுப் பகலிலிருந்து இரவு 7-00மணி வரை பொதுமக்களுக்குச் சகாய விலையில் தேங்காயெண்ணை விற்பனைசெய்ததையும் காணக்கூடியதாக இருந்தது. (152-க-வி)

## இராணுவத்தால் வீடுகள் எரிப்பு

(திருமலை)

மூதூர் கட்டைபறிச்சான் இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த இராணுவத்தினர் கடற்கரைச்சேனையில் இரு வீடுகளைத் தீயிட்டு எரித்தார்கள்.

இ. அருமைத்துரை, க. அரசரத்தினம், ஆகியோரின் வீடுகளை இராணுவத்தினரால் தீயிட்டு எரிக்கப்பட்டன. (வி)

### சுக்ளா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திய வெளியுறவு அமைச்சர் திரு. பி வி. சுக்ளா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுடன் பேச்சுவார்த்தைநடத்துவார்.

நான்கு நாட்கள் இலங்கையில் தங்கிநிற்கும் திரு. சுக்ளா வெள்ளிக்கிழமை சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். [க]

### மின்கோபிரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களுக்கு மின்சாரம் கிடைப்பதில் மேலும் தாமதம் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மின் கோபுரங்கள் திருத்துவதுதொடர்பாக யாழ் மின்சார சபையைச் சேர்ந்த இருஅதிகாரிகள் கொழும்புக்கு அழைக்கப்பட்டனர்.

இவர்கள் கொழும்பு செல்ல முடியாதநிலையில்ஒருவாரகாலமாக வவுனியாவில் தங்கி நிற்பதாகத் தெரியவருகிறது.

இந்த மின்கோபுரங்கள் திருத்துவதற்கு இலங்கை மின்சார சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ச)

### வவுனியாவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்த சின்னத்தம்பி பழனிச்சாமி என்பவர்படுகாயமடைந்தார்.

வவுனியா-மன்னார் வீதியிலுள்ள அரிசி ஆலையொன்றும் இந்த விமானக்குண்டு வீச்சின் போது சேதமானதாகத்தெரிவிக்கப்படுகிறது.

பெரியகட்டு என்னுமிடத்தில் நடந்த குண்டுவீச்சுத் தாக்குதலினால் ஆடுகள், மாடுகள் போன்றவை இறந்துள்ளன. (வி)

### கடற்படை

(4ம் பக்கம் பார்க்க)

கண்டி வலைகளில் தங்கியுள்ள மீன்களை பிடிக்க முடியாதநிலையில் மீன்களை கடலிலே விட்டுள்ளார்ர்வி.

மீனவர்கள் கடலுக்குச் சென்றால், நங்கூரமிட்ட கப்பலிலிருந்து பாரா வெளிச்சம் அடித்து, மீனவர்களையும், அவர்களது வள்ளங்களையும் நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களையும் நடத்தி, துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்துவருகின்றனர்.

இந்த நிலையில் ஆஸ்பத்திரிக் கடல், கோரியாவடி, பத்து வீட்டுத் திட்டம் போன்ற பகுதிகளில் மீனவர் நடமாட்டம் வெறிச்சோடியுள்ளது. (101)

## ஹெலி தாக்குதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள நாவல்குளம் பகுதியில் ஹெலிகொப்டலிருந்து நேற்று மாலை கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது. [வி]

## விமானத்தாக்கு

(வெலிஓயா)

மணலாறு மாவட்டத்தில் உள்ள நாயாறு செம்மலைப் பகுதியில் உள்ள மீனவர் கிராமத்தை, நேற்றுமுன்தினம் பகல் 11 மணியளவில் நான்கு பொம்மர்கள் குண்டு வீசித் தாக்குதல் மேற்கொண்டதில் இப்பகுதி பலத்த சேதத்துக்குள்ளானதாகக் கூறப்படுகின்றன. [வி]

## வீர மரணம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நான்கு போராளிகள் நேற்று வீர மரணம் அடைந்தனர்.

கடந்த 23ம் திகதி ஆனையிறவில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த பற்றிக் [கணேசலிங்கம் சின்னராசா-திருமலை] என்பவரும், மன்னாரில் நேற்று இடம்பெற்ற நேரடி மோதலில் மேஜர் ஜெவரி, பாலப்பெருமாள் (அனுதீபன்) வட்டக்கண்டல்] ஆகியோரும், மணலாறில் இடம்பெற்ற மோதலில் பரமானந்தம் (பத்மநாதன் கிருஷ்ணகுமார் கொழும்புத்துறை)என்பவரும் வீர மரணம் அடைந்தனர்.

இவர்களுக்குப் புலிகள் வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (வி)

### புலிகளின்

(1ம் பக்க தொடர்ச்சி]

நேற்றுக்காலை 7 மணியளவில் குறிப்பிட்ட முகாமிலிருந்து வெளியேற முனைந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பலமணி நேரம் மோதல் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் இழப்புக்களுடன் மீண்டும் முகாம் திரும்பினார்கள். (வி)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.